**ஜூலை - 2**

**"வையப்பட்டு ஆசிர்வதிக்கிறோம். துன்பப்பட்டு சகிக்கிறோம்." - 1கொரி 4 : 12**

நீங்கள் (கிறிஸ்துவின் பள்ளியில்) ஒரு உண்மையுள்ள மாணவனாக இருந்தால், சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப்பிரமாணம், அதாவது கிறிஸ்துவின் பிரமாணம், இருதயத்தின் நோக்கங்களையும் எண்ணங்களையும் காணும் ஒரு சாதனம் என்றும், நீங்கள் எல்லாப் பாவத்தையும் வெறுக்கும்போது, நீங்கள் எந்தப் பாவியையும் வெறுக்கக் கூடாதென்றும், இன்னும் உங்கள் இருதயத்தின் தேவ அன்பு பூரணப்பட்டிருக்கிறது என்றும் கண்டுகொள்ள அதிக சமயம் பிடிக்காது. நம்மை நிந்திக்கிறவர்களுக்கும் அவதூறு சொல்லுகிறவர்களுக்கும் எதிராக ஒரு கசப்பான உணர்ச்சி அளவு எழுந்தாலும், அது சண்டையிடப்பட்டு, அதன் மேல் முழுவெற்றியடைய வேண்டும். அப்போது நம்முடைய ஒவ்வொரு பாகமும், "உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள், உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள், ஆசீர்வதியுங்கள் கெடுதி செய்யாதிருங்கள்" என்ற நமது சிறந்த போதகருடைய போதனைகளுடன் இனிமையான இணக்கம் கொண்டிருக்கும். **- Z ’99, 5(R 2411)**

தேவனுக்கும் அவருடைய விவகாரங்களுக்கும் விசுவாசமுள்ளவர்களாய் இருக்கிறதினால், தேவனுடைய ஜனங்கள் துன்மார்க்கரிடமிருந்து ஏற்படும் கசப்பான நிந்தைகளுக்கு இலக்காகிறார்கள். இவைகளை அவர்கள் பதில் நிந்தைகளால் எதிர்க்கக்கூடாது. ஆனால் கொஞ்சம் அன்பு கனிந்த ஆசிர்வாதங்களுடன் அவைகளைச் சந்திக்க வேண்டும். அவர்கள் பலவகையான நாகரீகமானதும் முரட்டுத்தனமானதுமான உபத்திரவங்களை சகிக்க வேண்டும். ஆனால் பதிலுக்குப்பதில் செய்வதற்குப் பதிலாக, அமைதியுடன் தவறாக நடத்தப்படுதலை சகிக்க வேண்டும். **- P ’36, 94.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**அப் 23:2; 16:23; 14:19; 2கொரி 11:23-27; 1தீமோ 4:10; மத் 5:44; 1பேது 2:23; 3:9; லூக் 23:34; அப் 7:60; ரோம 12:20; அப் 22:22; ஏசா 24:25**

**கோபுர வாசிப்பு : Z ’13, 35 (R 5172).**

**வினாக்கள் : இந்த வசனத்தின் சம்பந்தமாக இந்தவார அனுபவங்கள் என்ன? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? அவற்றால் ஏற்பட்ட அனுகூலங்கள் எவை?**